*1970 செப்டம்பர் 9]*

காரணத்தால் சிறு தொழில் ஆரம்பிப்பதற்கு கொஞ்சம் தயக்கம் எற்படு கிறது. இந்த உண்மையை அரசாங்கம் உணருகிறது, இதைப்பற்றி என்ன முடிவு செய்யலாம் என்று Small Scale Industries Advisory Board சில ஆலோசனைகளைக் கூறி இருக்கிறது. அந்த ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

**திரு. கே. என். குமாரசுவாமி:** தலைவரவர்களே, இந்த சிறு தொழில் என்னென்ன ஆரம்பிக்கலாம் என்பதற்காக பட்டியல் இருக்கிறதா? அந்த பட்டியலில் உள்ள தொழில்கள் ஆரம்பிப்பதற்காக மூலப்பொருள்கள் தமிழ் நாட்டில் கிடைக்கிறதா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பட்டியல் எற்கெனவே இருக்கிறது. அது மத்திய சர்க்காரில் இப்படி இப்படி என்று வகுத்து இருக்கிறது. மூலப் பொருள்களைப் பொறுத்தவரையில் அதைக் கொடுக்கும் சக்தி மாநில அரசுக்கு இல்லை. நேற்றுக்கூட நான் சிறு தொழில் அதிபர்களை அழைத்து புதிய வேலை வாய்ப்புகளை எற்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்ட போது அவர்கள் நாங்கள் தொழிற்சாலை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் மூலப்பொருள்கள் தேவை என்று சொன்னார்கள். இன்னும் பல்லாயிரக்கணக்கான இன்ஜினியர்கள், டிப்ளமா ஹோல்டர்கள், கிராப்ட்ஸ்மேன் ஐ.டி.ஐ. பயின்றவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியும், அதற்குத் தயாராக இருக்கிறோம். தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்களைத் தர தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். நான் பதில் சொல்லவில்லை. அந்த அதிகாரம் என்னிடத்தில் இல்லை. நாங்கள் அதற்காகத்தான் 12, 13 தேதிகளில் மாநாடு நடத்துகிறோம். அங்கத்தினர் அங்கு வந்து நல்ல யோசனைகளைக் கூறலாம்.

### சிறு தொழில் துவக்குவது குறித்துப் பயிற்சி.

*325 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் சிறு தொழில் துவக்குவது எப்படி என்பதைச் சொல்லித்தர ஓர் நிலையம் துவங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தொழிலில் முனைபவர்களுக்குப் புதிய வகையில் தொழில் துவக்குவது, புதிய தொழில் பிரிவுகள் துவக்குவது, அவற்றை எற்படுத்தக்கூடிய இடம், ஆகியவற்றைப்பற்றி தொழில் வணிகத் துறை தற்போது அறிவுரை வழங்குகிறது. சென்னையிலுள்ள சிறு தொழில் பணிமனை நிறுவனமும் Small Industries Service Institute சிறு தொழிற் பிரிவுகளுக்கு நவீன தொழில் நுட்ப முறைகளைப்பற்றியும், நவீன யந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்துவதைப்பற்றியும் அறிவுரை வழங்குதலுடன் செய்முறையிலும் அறிவுரை அளித்து வருகிறது. புதியதாக நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு சிறு தொழில் முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்களில் ஒன்று, மாநிலத்தில் கூடுதல் சிறு தொழில்கள் எற்படுவதற்கு வேண்டிய வழிவகைகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் தொழில் துவங்க முனைபவர்களுக்கு தொழில் நுணுக்க உதவிகள் அளித்தல்,

அக்கழகம் வேண்டிய அலுவலர்களை நியமித்து விவரங்களைத் தயாரிப்பதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, சிறு தொழில் துவக்க வேண்டுமென்று பலர் விரும்புகிற நேரத்தில் அவர்களுக்குத் தக்க ஆலோசனைகளை சொல்லித் தருவதற்கும், தொழில் துறையில் அனுபவமும் பயிற்சியும் தருவதற்கும் ஏதாவது புதிய அமைப்பு முறை ஏற்படுத்த அரசு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மகாராஷ்டிரத்தில் இப்படிப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. குஜராத் மாநிலத்திலே இப்படிப்பட்ட முயற்சி எடுத்து இருக்கிறார்கள். இதைப் பின்பற்றி நம்முடைய மாநிலத்திலே அந்த முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்ற முறையில் தொழிலைத் தொடங்குபவர்கள் என்னிடத்தில் கேட்டு இருக்கிறார்கள். அதற்குத் தேவையான தொழில் அனுபவம் எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். தொழிலைப் பற்றி ஆராய்ச்சிசெய்து ஒரு 'பீசிபிள் ரிபோர்ட்' அது பொதுவாக எப்படி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொல்வது. சிறு தொழில் வாரியத்தில் இப்படி 'பீசிபிள் ரிபோர்ட்' கொடுப்பதற்கான பணிகளை அனுபவம் மிக்கவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். டெக்னிகல்-நோ-ஹௌ யோசனைகள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதைக் கண்டித்து திரு. மார்டின் பேசினர் என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

## புதுத்தொழில்கள் தொடங்குவதில் காலதாமதம்

* 326 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிய தொழில்களைத் தொடங்க லைசென்ஸ் கிடைப்பதில் உள்ள கால தாமதத்தைத் தவிர்க்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முடிவு எடுக்கப்படாமல் மத்திய அரசிடம் உள்ள நேர்வுகள் குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டி மாநில அரசு இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்தை மேற்கொண்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க லைசென்ஸ் கிடைப்பதற்கு உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க, ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தை நிர்ணயித்து, அதற்குள் அனுமதி வழங்குவது என்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஆலோசனைக் குழு அண்மையில் கூடியபொழுது, தொழில் அதிபர்களெல்லாம் தொழில் முயற்சிக்கு அனுமதி வாங்குவதிலே தடைகள் இருப்பதினால் மிகவும் பாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பரிசிலிக்கத் தனிக் குழு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அனுமதி பெறுவதிலே என்னென்ன காரணங்களினால் கால தாமதம் ஏற்படுகிறது என்பதைப்பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதிலும்கூட, ஐ.டி.ஆர். ஆக்ட் மத்திய அரசின் சட்டத்தின்கீழ் அனுமதி கொடுக்கிற காரணத்தினால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்குக்